## ஏப்ரல் 28

# *புனித ஷனேல் இராயப்பர் (1803 – 1841)*

இவர் தம் பங்குத் தந்தையின் உதவியால் கல்வி பயின்று குருப்பட்டம் பெற்று, துணைப்பங்குக் குருவாய் நியமிக்கப்பட்டார். இவர் மாதா மீது மிகுந்த பக்தி கொண்டவர். "மரியாயை நேசிப்பேன். பிறரும் அன்னையை நேசிக்கச் செய்வேன்" என்பதே இவரது விருது வாக்கியம். "மரியாயே, உம் வழியாக மக்கள் இயேசுவை அறிந்து நேசிப்பார்களாக" என்று அடிக்கடி இவர் செபிப்பார். மே மாதத்தில் தேவ தாய்க்கு தோத்திரமாக பக்தி முயற்சிகளைத் தொடங்க இவர் திட்டமிட்டார். இதை பங்குக் குரு விரும்பவில்லை. என்றாலும் இவரே வெற்றி பெற்றார். இவர் சென்ற இடமெல்லாம் கிறிஸ்தவ வாழ்வு செழித்தோங்கியது. பள்ளிக் கூடங்கள் விருத்தி அடைந்தன. பாவிகள் கடவுளிடம் திரும்பினார்கள். நல்லவர்கள் விசுவாசத்திலும் புண்ணியத்திலும் முன்னேறினார்கள். தூரமான நாடுகளுக்குப் போய் மக்களை கடவுளிடம் கொண்டு வர இவர் விரும்பி அதற்கென்று ஒரு சபையில் சேர்ந்து வேதபோதகர்களோடு ஒசியானியா தீவுகளுக்கு இவர் அனுப்பப்பட்டார். இவரிடமிருந்து ஆதாயத்தை எதிர்பார்த்த சுதேசிகள், புத்தூனா தீவில் இவர் இறங்க அனுமதியளித்தார்கள். சுதேசிகளின் அனுமதியுடன் அவர்களின் தெய்வங்களின் சிலைகளை குருக்கள் எரித்தார்கள். குருக்கள் யாதொரு ஆபத்துமின்றி இருப்பதைக் கண்ட சுதேசிகள் தங்கள் தெய்வங்கள் வல்லமையற்றவை என்பதை உணர்ந்தனர். இரண்டு கிராமங்களில் உள்ள மக்கள் அனைவரும் ஞானஸ்நானம் பெற விரும்பினதைக் கண்ட சாத்தான் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக அரசனை எழுப்பி விட்டான். தீவின் முக்கிய தெய்வத்தின் இருப்பிடமாக அரசனை மக்கள் இதுவரை கருதி வந்தார்கள். கிறிஸ்தவர்களான பின் இவ்விதம் செய்யமாட்டார்கள். இதை நினைத்து அரசன் கடுங்கோபம் கொண்டான். அரசனின் மகன் ஒருவனும் கிறிஸ்தவனாகி விட்டான். அரசன் நம் புனிதரைக் கொல்ல முடிவு செய்து 28.05.1841ல் கொல்லப்பட்டார்.

மூன்றாண்டுகளாக அங்கு அவர் உழைத்தும் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 45 பேர். மேலும் சுமார் 3 பேர் ஞானஸ்நானம் பெற தங்களை தயாரித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் இவர் இறந்த மூன்று ஆண்டுகளில் புத்தூனா தீவிலுள்ள மக்கள் அனைவரும் கத்தோலிக்கரானார்கள். நாளது வரை வேதத்தில் உறுதியாகவும் இருந்தார்கள்.

**சிந்தனை:**

வேதபோதகர்கள் தங்கள் வேலையை தேவதாயிடம் ஒப்படைப்பார்களாக.

**செபம்:**

மரியாயே! மாதாவே! எல்லா மக்களும் உம்முடைய மகனை அறிந்து நேசிக்கச் செய்யும்.